# திருக்குறள் செம்மல் ந.மணிமொழியனார் முத்தமிழாயம் வழங்கும்

# இலக்கியப் பதாகை (பறப்பு-8)




"மனித உணர்வுகளை
மண்ணில் மலர்வித்திடும்
விந்தையின் தோற்றம்தான் மாத்தமிழ் - அதுவே
இயலிசை நாடகமெனும் முத்தமிழ் "

"முத்தமிழும் முக்கனியாய் இணைந்து
மானிட சமூகத்தை மலரச் செய்து
முரண்களை களைத்தெரிந்து - உலகை
ஒன்றிணைக்கும் நுண்ணறிவே கலை"

கலைகள் வாழ்க்கையை வளமாக்குகிறது. ரசிக்க வைக்கிறது.

திருக்குறள் செம்மல் ந.மணிமொழியனார் அவரின் நினைவாக, விநாயகா மிஷன்ஸ் ஆராய்ச்சி நிறுவனத்திற்குட்பட்ட -கலை மற்றும் அறிவியல் புலம் (ஆறுபடைவீடு

தொழிற்நுட்ப வளாகம்) - தமிழ்த்துறை சார்பில் எட்டாம் நிகழ்வாக ஜீலை 30 ஆம் தேதி இலக்கியப்பதாகை பறப்பு – 8 **முத்தமிழ்க்கலைகள்** (பயிலரங்கம்) நிகழ்வு நடந்தேறியது.

  

இந்நிகழ்வில் மூன்றாம் அரங்கு நாடகக் குழுவின் இயக்குநர், கூத்துப்பட்டறை பயிற்றுவிப்பாளர் என பன்முக ஆளுமையுடைய திரு.K.S. கருணாபிரசாத் அவர்கள் மாணவர்களுக்கு அரங்க அமைவு, நடிப்புத்திறன் பயிற்சி, ஒப்பனைக்கலை மற்றும் தற்காப்புக்கலைகள் பற்றியும், தமிழ்நாடகக்கலைகள் பற்றியும் நிகழ்த்து கலைகள் வாயிலாக மாணவர்களை பங்கு பெறச் செய்து நிகழ்த்தி காட்டினார். கிராமிய நாடகங்கள் எவ்வாறு இருக்கும் என்பதை மாணவர்களை முன்னிருத்தி காட்சிப்படுத்தினார். மாணவர்களின் தனித்திறமையை அறியும் வகையில் இப்பயிலரங்கம் இனிதாக அமைந்தது.

திரு. வேல்முருகன் அவர்கள் மாணவர்களுக்கு சிலம்பின் அடிப்படை பயிற்சியின் உத்திகளையும், சுருள்வாள், களரி,நுஞ்சாக் ஆகிய தற்காப்பு கலைகளையும் அழகாக நிகழ்த்தி காட்டினார்.

தமது வாழ்த்துக்களையும், ஆசிகளையும், ஆதரவையும் மேதகு டாக்டர் அ.ச.கணேசன் (வேந்தர்), டாக்டர் அனுராதா கணேசன் (இயக்குநர்) அவர்கள் அளித்தனர்.

முனைவர் ஆர்.சண்முகவள்ளி (இயக்குநர்) கலை மற்றும் அறிவியல் புலம் அவர்கள் வாழ்த்துரை வழங்கினார்.

முனைவர் ப.ஜெயபாரதி அவர்கள், சிறப்பு விருந்தினர் திரு.K.S. கருணாபிரசாத் அவர்களை அறிமுகப்படுத்தி பேசிய போது, அவர் பெற்ற விருதுகள், இயக்கிய நாடகங்கள், எழுதிய நூல்கள், நடிப்பு அனுபவங்களை பற்றியும் எடுத்துக்கூறி மாணவர்களுக்கு அறிமுகம் செய்து வைத்தார்.

திரு.அ.முத்துக்குமார் தமிழ்த்துறை உதவிப்பேராசிரியர் அவர்கள் வரவேற்புரை நல்கினார். திரு.சு.பழனியப்பா தமிழ்த்துறை உதவிப்பேராசிரியர் அவர்கள் நன்றியுரை நவின்றார். முனைவர் ந.சுரேஷ் அவர்கள் நிகழ்ச்சியை தொகுத்து வழங்கினார்.

இவ்விழா, மாணவ மாணவிகள், அனைத்து துறை சார்ந்த பேராசிரியர்கள், மற்றும் அலுவலக ஊழியர்களின் நல் ஆதரவுடன் இனிதே நடைபெற்றது.







Aarupadai Veedu
Institute of Technology
An ambit institution of VMRF - DU
RECENT AI
Approved
by
AICTE



